**மினிப்பே பிரதேச சபை - 2022**
---------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

.

மினிப்பே பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மினிப்பே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை அலுவலக வளவின் ஒரு பகுதி மகாவலி அதிகார சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டு முன்னைய ஆண்டிற்காக பெற வேண்டிய ரூபா 150,000 தொகை மீளாய்வவாண்டிலும் ஆண்டின் போது கணக்கீடு செய்யும் போது மகாவலி அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டிய வாடகை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட போதும் திரண்ட நிதி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | கணக்கு சரி செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டில் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கிற்கு ரூபா 111,028 செலவு வைக்கப்பட்டிருந்த போதும் உரிய பேரேட்டுக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய ஹசலக பழைய நீதிமன்ற கட்டிடத்தில் அமைந்துள்ள 02 கடைகளில் இருந்து ரூபா 216,000 மற்றும் பழைய கூட்ட மண்டபத்தில் ரூபா 204,000 ஆன வாடகை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | சபைக்குரிய 05 வாரச் சந்தைகளின் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 896,552 ஆக இருந்த போதும் அது ரூபா 544,088 எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டுக்குரிய பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 323,216 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | காணி மற்றும் கட்டிடக் கணக்கில் அகற்றப்பட்ட 06 ஆம் இலக்க கடையின் பெறுமதி ரூபா 250,000 மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திரண்ட நிதிய கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | கணக்கு சரி செய்யப்பட வேண்டும் |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதன ஈடுபாட்டுக்கு வருமான பங்களிப்பு மற்றும் சபையின் உள்ள நிலையான சொத்துக்கள் மீதிகளுக்கிடையே ரூபா 325,826 ஆன வேறுபாடு காண்பட்டது | இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அறிக்கை விடுவதாக | கணக்கு மீதிகள் சரியாக இருக்க வேண்டும் |
| (ஏ) | சபைக்குரிய 03 பொது நூலகங்களுக்கு பூச்சுக்களை பூசுவதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 937,060 ஆன மீண்டெழும் செலவினம் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் 14 இலட்சமாக இருந்ததுடன் இத்தொகை இதுவரை செலுத்தப் பட்டிருக்கவில்லை என்பதாக | மீண்டெழும் செலவினத்தை மூலதனமாக்கப்பட கூடாது |
| (ஐ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ல் உள்ளவாறு சபையின் பிரதான மின் பட்டியலில் இலங்கை மகாவலி அதிகாரசபையால் பயன்படுத்தப்பட்ட பகுதிக்குரிய பெற வேண்டிய 40 சதவீதமான தொகையான ரூபா 119,317 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் கணக்கு இறுதிக் கணக்கில் உள்ளடக்குவதாக பெற வேண்டிய தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பெற வேண்டிய தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 177,623 ஆன எழுதுகருவி இருப்பு மீதி கணக்கில் இருந்து விடுபட்டதை கணக்கீடு செய்த போது திரட்டிய நிதி கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | பிழையொன்று இடம் பெற்றுள்ளதை ஏற்றுக் கொள்வதாகவும் அதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹசலக நூலகத்தின் நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 694,503 கூடுதலாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பான தகவல்களை ஆராய்ந்து சீராக்குவதாக | - மேற்படி - |

**1.6.2. தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 367,300 ஆன தொங்கல் கணக்கு மீதியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தொங்கல் கணக்கின் மீதிகள் தொடர்பாக மேலும் ஆராய்ந்து பார்த்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்குகள் சீராக்கப்பட வேண்டும் |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,465,441 ஆன 03 கணக்கு மீதிகள் அட்டவணைகள், உரிய கோவைகள் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | வருமான கடன்பட்டோர் முன்பள்ளி கட்டணங்கள் மற்றும் வைப்புக்கள் தொடர்பாக மேலும் ஆராய்ந்து பார்த்து அறிக்கையிடுவதாக | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அட்டவணைகள் சான்றுகள் பேணி செல்லப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) | அதிகார பிரதேசத்தில் வியாபார அனுமதிப் பத்திரங்கள், வியாபார வரி | வருமான பரிசோதகர்கள் பதவி வெற்றிடங்கள் | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | 59 மற்றும் 60 ஆம் இலக்க விதிகள் | மற்றும் கைத்தொழில் வரி அறவிடப்பட வியாபார நிறுவனங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | காணப்படுவதால் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது எதிர்காலத்தில் கணிப்பிட்டு நடவடிக்கை மேற்கொள்ள அறிக்கை இடுவதாக | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | காலாவதியான 173 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கைத்தொழில் பலவற்றில் காணப்படும் பொருளாதார சிக்கல் நிலைமை தொடர்பில் செயலற்ற காணப்படு வதுடன் ஏனைய கைத்தொழில்களுக்காக நினைவூட்டல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தால் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,284,008 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,014,634 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,335,885 | 1,333,672 | 848,500 | 2,832,967 | 1,404,884 | 1,333,672 | 794,356 | 2,347,795 |
| (ii) | வாடகை | 7,592,442 | 5,627,771 | 4,187,388 | 14,109,443 | 6,039,300 | 6,000,818 | 670,139 | 12,669,060 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,717,000 | 1,360,008 | 1,279,477 | 221,156 | 1,898,500 | 1,586,407 | 1,672,282 | 140,625 |
| (iv) | ஏனைய வருமானம் | 12,609,000 | 16,147,595 | 10,114,377 | 15,616,900 | 45,259,720 | 46,449,226 | 32,938,195 | 9,583,682 |
| | கூட்டுத் தொகை | 23,254,327 | 24,469,046 | 16,429,742 | 32,780,466 | 54,602,404 | 55,370,123 | 36,074,972 | 24,741,162 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**<br>மொத்த வருமான மூலங்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 24,549,381 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 32,780,466 ஆக இருந்த காரணத்தினால் நிலுவை வருமானத்தில் அதிகரிப்பு 34 சதவீதமாகும். | தற்போது முறையான வேலைத்திட்டமொன்றின் கீழ் வருமானங்களை சேகரிக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் அதன் முன்னேற்றத்தை சமர்ப்பிப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ஆ) | **வீதவரி**<br>வீதவரி அலகொன்றின் நிலுவை ரூபா 10,000 இற்கும் இடைப்பட்ட 31 வீதவரி ஆதனங்களிலிருந்து மொத்தம் ரூபா 711,407 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய வீதவரி தொடர்பாக ஆராய்ந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| **(இ)** | **நீர் வரி**<br>10 நீர் செயற்திட்டங்களின் நீர் இணைப்பு துண்டிக்கப்பட்ட 225 நீர் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 549,635 தொகை மற்றும் சபையால் பராமரிக்கப்படாத கைவிடப்பட்டுள்ள 02 செயற்திட்டங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 53,365 தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுகப்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்றினைத் தயாரித்த செயற்படுத்துவதாக | நிலுவை வருமானத்தை அறவிடுதல் வேண்டும் |
| **(ஈ)** | **வாடகை**<br>பிரதேச சபைக்கு சொந்தமான 08 கடைத் தொகுதிகளில் 47 கடைகளில் மற்றும் 04 நடமாடும் வியாபார தளங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் வாடகையை உரிய காலத்திலே அறவிடப்படாமல் இருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ல் உள்ளவாறு ரூபா 12,605,834 ஆனா நிலுவையொன்று காணப்பட்டது | நீண்ட காலமாக வருமான பரிசோதகர்கள் வெற்றிங்களுடன் வருமானத்தை சேகரிப்பதில் தாமதம் ஏற்பட்டதாக | நிலுவை வருமானத்தை அறவிடவோ அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள விளம்பர பதாதைகள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொண்டு கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய போதிலும் மொரயாய வீதியில் அமைந்துள்ள 27 விளம்பர பதாதைகளில் இருந்து ரூபா 81,975 ஆன கட்டணங்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை | கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு உரிய கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | வருமானத்தை அறவிடுதல் வேண்டும் |

**(ஊ) நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 9.299,390 ஆகவும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 1,003,650 ஆகவும் இருந்தது. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் அறவீடு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நீதிமன்றத் தண்டப்பணத்தையும் முத்திரைக் கட்டணங்களையும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்று வதற்காக உப உறுப்புரைகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 03 விடயங்களுக்கு மாத்திரம் உப உறுப்புரைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. | சபையினால் 03 உப உறுப்புரைகளை பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அத்துமீறி நிர்மாணிக்கப்பட்ட அத்திவாரம் ஒன்றை உடைத்து அகற்றியமையால் இடம்பெற்ற நட்டமான ரூபா 24,710 தொகைக்காக குறித்த நபர் ரூபா 500,000 ஆன நட்டம் ஒன்றை கோரி தொடரப்பட்ட வழக்கிற்காக ரூபா 530,500 தொகை கொடுப்பனவு செய்யுமாறு ஒரு | நி.பி 10(4)4 பரிசோதனை நடத்தப்பட்டு அதற்குப் பொறுப்பாக 04 உத்தியோகத்தர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். உரியவர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் | பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் நட்டங்கள் அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தரப்பிலான தீர்ப்பொன்றை வழங்கியதால் சபையினால் முறைப்பாட்டாளர் தரப்புக்கு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 530,500 ஆன இழப்பீட்டுத்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன். இவ்வழக்குக்காக சபைக்கு சொந்தமான கெப் வண்டி 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வழக்கு பொருளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 843,700 ஆன திருத்தச் செலவினத்துடன் ரூபா 1,374,200 ஆன நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. இந்நட்டத்தில் இருந்து ரூபா 530,500 ஆன நட்டத்தை நி.பி 104(4) பரிசோதனையின் பிரகாரம் 04 நபர்களிடமிருந்து ரூபா 134,950 வீதம் அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் அதனை அறவிட்டு அறிக்கையிடுவதாக | |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹசலக வியாபார தொகுதியின் 20 கடைகளில் இருந்து நிலுவை கடை வாடகை ரூபா 9,674,763 ஆக இருந்ததுடன் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால அளவில் குத்தகையாளர்கள் குத்தகை வாடகை செலுத்தி இருக்கவில்லை. அனைத்து கடைகளுக்கும் 2009 ஆம் ஆண்டின் பின்னர் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் அனைத்து கடைகளினதும் பின்புறமாக அத்துமீறிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு கடைகளில் பின் பகுதியை நிரந்தர குடியிருப்பாகவும் குத்தகையாளர்கள் மேல் மாடியில் அத்துமீறி நிர்மாணத்தையும் மேற்கொண்டிருந்தனர் | தற்போது உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் மூலம் குத்தகையாளர்களை அகற்றுவது தொடர்பாக பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாகவும் | காணியின் உரித்தை கையேற்று முறையான உடன்படிக்கை செய்யப்பட வேண்டியதுடன் அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றுவதற்கும் கடை வாடகையை உரிய நேரத்தில் அறவிடப்பட வேண்டும் |

**3.4 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 1,978,050 ஆன 03 வாகனங்கள் 08 ஆண்டு காலமாக ஓட்டத்தில் இல்லாமல் காணப்படுவதுடன் வாகனங்களைத் திருத்துவதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கெப் வண்டியை திருத்துவதற்கும் உழவு இயந்திரம் மற்றும் டேலரை ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் பரிந்துரைகள் பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | திருத்தங்களை மேற் கொள்ளக்கூடிய வாகனங்களை திருத்துவதற்கும் எனைய வாகனங்களை கையகற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ரூபா 139,278,220 ஆன காணிகள் மற்றும் மயானங்கள் 59 இன் உரித்து கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை வழங்குமாறு கோரி அவ்வப்போது உரிய நிறுவனங்கள் அறிவித்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | காணிகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | புற நெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 71,949,560 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்கு கட்டடத்தின் இரண்டாம் மாடியில் 7,000 சதுர அடி அளவு ஒன்று மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எவ்வித பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | பிரதேச சபையின் வருமானம் கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையால் மேலும் குறைவடைந்தது. ஆதலால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பணத்தை ஒதுக்கீடு செய்ய முடியாதிருந்தது | கட்டிடங்கள் செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

## 3.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **நீர் வழிந்தோடும் வடிகான் அபிவிருத்தி ரூபா 425,388**<br><br>இச்செயற்திட்டத்தின் மதிப்பீட்டு வேலை விடயம் 03 இன் பிரகாரம் ஷட்டரிங் அடித்தல் HSR ST - 57 இன் பிரகாரம் ஒரு சதுர மீட்டருக்கு ரூபா 1,587 வீதம் 79.58 சதுர மீற்றருக்காக ரூபா 126,325 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் HSR ST - 112 இன் பிரகாரம் வடிகான் ஓரங்களுக்கு ஷட்டரிங் அடிப்பதற்காக (Shuttering) ரூபா 830 ஆன வீதம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கையில் கூடுதலாக இனங்காணப்பட்ட விகிதத்தின் பேரில் ஒப்பந்ததாரருக்கு ஷட்டரிங் (Shuttering) அடிப்பதற்காக கொடுப்பனவு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 60,257 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள ரூபா 60,257 ஆன தொகையை ஒப்பந்தக்கார ரிடமிருந்து அறவிடுவதற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | நிறைவேற்றப்பட்ட வேலைக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதுடன் மேலதிக கொடுப்பனவினை பரிந்துரைத்த உத்தியோகத்தர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**(ஆ) ஹசலக பொது நூலக திருத்தம் - ரூபா 5,001,755**

| | | | |
|---|---|---|---|
| **(i)** | 2022 செப்தம்பர் 29 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் எல்லைகளை மிகைத்து ரூபா 5,001,755 பெறுமதிக்குரிய செயற்திட்டங்கள் 02 ஆக வழங்கப்பட்டிருந்தன் காரணமாக கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டு போட்டிக்கு அனுப்பி குறைந்த விலைக்கு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கிருந்த நன்மை இழக்கப்பட்டிருந்தது. | ஹசலக பொது நூலகத்தின் திருத்தங்களுக்காக எமது சபை மூலம் நிதி ஏற்பாடுகளின் கீழ் இரண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக | நிதி ஏற்பாடு காணப்படும் போது கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு கிரய மதிப்பீட்டு அடிப்படையில் பெறுகை செய்யப்பட வேண்டும் |
| (ii) | கட்டிட நியம விகிதத்தின் (BSR) பிரகாரம் ரூபா 05 மில்லியனை மிகைக்கும் ஒப்பந்தக்காரருக்காக பயன்படுத்தப்படும் விகிதம் பயன்படுத்தப்படாமல் ரூபா 05 மில்லியனுக்கு குறைந்த ஒப்பந்தங்களுக்காக பயன்படுத்தப்படும் விகிதம் பயன்படுத்தப்பட்ட மையால் சபை நிதியத்திற்கு ரூபா 286,589 ஆன நட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது. | பயன்படுத்தப்பட்ட விகிதங்கள் சரியானதெனெ | ரூபா 50 மில்லியனை மிகைக்கும் போது BSR இன் பிரகாரம் பயன்படுத்தப்பட வேண்டிய விகிதங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (iii) | வரையறுக்கப்பட்ட பல நோக்கு சேவைக் கூட்டுறவு சங்கத்துடன் 2022 திசம்பர் 30 ஆம் திகதி கைச்சாத்திட்ட உடன்படிக்கைகள் இரண்டிலும் 03 ஆம் பிரிவின் நிர்மாண பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கும் திகதி தொடர்பாக குறிப்பிடப்படாதிருந்ததுடன் 2023 ஏப்ரல் 06 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் 03 மாத காலம் வழங்கப்பட்டிருந்த துடன் மேலதிகமாக எடுக்கும் காலத்திற்காக தாமத கட்டணங்கள் அறவிடப்படும் விடப்படும் என்பதாக | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |